LET US WORK FOR A SOCIAL CHANGE
ISD

Rights

# உரிமை

VOL 1 | AUG 1998 | NO 2

## உள்ளே

சிறுவர்களின் உரிமை

பிரசவ சகாய நிதிச் சட்டம்

கம்பனியின் பங்குகள்

திருமணப் பெண்ணின் சம்மதம்

## உரிமை....

இரண்டாவது பிரசுரம் தங்களது கரங்களை வந்தடையும் வேளை, ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட மனித உரிமை சாசனம் தனது 50வருடப் பூர்த்தியை அடைவதற்கு இன்னும் 112 நாட்களே இருக்கின்றன. அதாவது எதிர்வரும் டிசம்பர் 10ம் திகதியுடன் மனித உரிமை சாசனம் பிரடகடனப்படுத்தி 50 வருடங்களாகப் போகின்றது. கடந்த ஐம்பது வருடங்களில் மனித உரிமையும் பெண்ணுரிமையும், மனித உரிமையும் சிறுவர் உரிமையும் என மனித உரிமை வளர்ச்சியடைந்துள்ள போதிலும் இவ்வளர்ச்சிகள் உலக நாடுகளினது பெரும்பான்மையினராகவுள்ள ஏழைகளின் பால், குறிப்பாக சிறுபான்மை இனங்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள்பால் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது கேள்விக்குறியே.

இப்பின்னணியில் இலங்கை வாழ் மலையக மக்களின் மனித உரிமைகளைப்பற்றி நோக்குவோமாயின், இங்கு உரிமையை விட உரிமை மீறல்களே பெரிதும் காணப்படுகின்றது. எவ்வாறாயினும் உரிமைகள் எதுவென அறிய வைக்கும் எம் முயற்சியின் இன்னுமொரு படியாக இம்முறை, திருமணத்திற்கு பெண்ணின் சம்மதம் அவசியம் என்ற சட்டத்தின் தன்மைப்பற்றியும், சிறுவர் உரிமை என்றால் என்ன என்பது பற்றியும், பிரசவ சகாய நிதிச் சட்டம் பற்றியும் மற்றும் அண்மையிலே தோட்டக்கம்பனிகள் வழங்கிய பங்குகள் பற்றிய தெளிவினையும் இரண்டாவது உரிமை தாங்கி வருகின்றது. பங்கு லாபம் பற்றி சிறிது விளக்கமாக கூறுவோமாயின் கம்பனிகள் தொழிலாளர் மீது அனுதாபப்பட்டு இப்பங்குகளை வழங்கவில்லை என்பதும் தொழிலாளர்கள் தோன்றிய நாள் முதல் தமது உழைப்பின் இலாபத்தினை முதலாளிகளே பெறுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதற்கெதிராக தொழிலாளர் குரல் எழுப்பி வந்ததுடன் போராடி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. தொழிலாளர்களின் எதிர்ப்பினை தவிர்ப்பதற்கும் மற்றும் அவர்களும், உற்பத்தி உடைமைகளுக்கு சொந்தக்காரர்கள் என்ற மாயையை உருவாக்கும் முயற்சியே இப்பங்கு வழங்கல். இப்பங்கு வழங்கல் உலக வங்கியின் ஆலோசனையின் பேரிலேயே வழங்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் தம்மை சுரண்டுவதற்கு எதிராக கொதித்தெழும் தொழிலாளர்களின் போர்க்குணத்தை தவிர்ப்பதற்காகவே உலக வங்கி இவ் உபாயத்தை முன்வைத்துள்ளது. அதன் ஒரு விளைவாக இன்றைய தோட்டக் கம்பனிகள் சிறு பங்குகளை தொழிலாளர்களுக்கு வழங்கியுள்ளன.

உலகத் தொழிலாளர்களின் போராட்டத்தின் விளைவாக தம் சம்பளத்திற்கு சிறு தொகைப் பணத்தை பெறக் கூடிய வாய்ப்பினை தோட்டத் தொழிலாளர் பெற்ற போதிலும் அதனையும் இழக்கும் அபாயம் உருவாகியுள்ளது. எனவே இப்பங்கு பத்திரத்தை வறுமையின் மத்தியிலும் காப்பாற்றிக் கொள்வது தொழிலாளர்களின் கடைமையாகும்.

மலையக மக்கள் எவ்வாறான உரிமைகளைக் கொண்டுள்ளனர் மற்றும் எவ்வாறான உரிமை மீறல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் என்பதனை அறியச் செய்யும் வகையிலே இப்பிரசாம் வெளியிடப்படுவதனால் உரிமைகள் தொடர்பாகவும் உரிமை மீறல்கள் தொடர்பாகவும் நீங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்கும்படி கோருவதுடன், இவ்விதழில் வரும் விடயங்கள் தொடர்பாக உங்களின் கருத்தை எமக்கு அறியத் தருவதுடன் இவ்விதழில் வரும் விடயங்களை மற்றவர்களுக்கு அறிவூட்டுவதனூடாக நீங்கள் மலையக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்கும் முயற்சியில் பங்குதாரராகும்படி வேண்டுகிறோம்.

# சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்போம்



1. 14 வயதிற்கு குறைந்தோரை வேலைக்கு அமர்த்தாதீர்கள்.

2. 16 வயதிற்கு குறைந்த சிறுமியருடன் உடல் உறவு கொள்ளாதீர்கள்.

3. பிள்ளைகளை சுதந்திரமாக விளையாட அனுமதியுங்கள்.

4. கல்வியை இடைநிறுத்தி சிறுவர்களின் எதிர்காலத்தை பாழாக்காதீர்கள்.

**1**

கடைக் காரியாலயச் சட்டத்தின் கீழும் தொழிற்சாலை சட்டத்தின் கீழும் வேலை செய்யக்கூடிய ஆகக் குறைந்த வயது 14.

**2**

தண்டனை சட்டக் கோவையின் 1995ம் ஆண்டின் திருத்த ஏற்பாட்டிற்கமைய 16 வயதிற்கு கீழ்பட்ட பெண் ஒருவருடன் அப்பெண்ணின் சம்மதத்துடனோ அல்லது சம்மதமின்றியோ உடல் உறவு கொள்வது தண்டனைக்குரிய குற்றமாகும். ஆனால் இவ்வேற்பாடு சட்ட ரீதியாக திருமணம் செய்தவர்களுக்கு பொருந்தாது.


**3**


உடல், உள ரீதியான ஆரோக்கியத்திற்கு விளையாட்டு மிக முக்கியம் என்பதால் பிள்ளைகளை சுதந்திரமாக விளையாட அனுமதியுங்கள்

**4**

சிறுவர்களின் கல்வியை இடை நிறுத்துவதால் அவர்களது எதிர்காலமும் குடும்ப எதிர்காலமும் நாட்டின் எதிர்காலமும் பாதிப்படையும்.

# பிரசவ சகாய நிதிச் சட்டம்






தோட்டத் தொழிலாளர்களுக்கான பிரசவ சகாய நிதிச் சட்டத்தின்படி, தொழில் ஆணையாளர் (லேபர் கமிஷனர்) ஒவ்வொரு வருடமும் தோட்டத்தில் இயங்கி வரும், பிரசவ விடுதிகள் பிரசவத்திற்கு தகுதியானது என அங்கீகரிக்க வேண்டும். அவ்வாறு அங்கீகரித்த தோட்ட பிரசவ விடுதிகள் இருக்கும் தோட்டங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் குழந்தைகளை பிரசவித்தால், பிரசவ சகாய நிதியத்தில் 3/7 பகுதி பணத்தை தோட்ட நிருவாகம் பிடித்துக் கொள்ளும்.

ஆயினும், 1992ம் ஆண்டின் பின் தொழில் ஆணையாளர் எந்தவொரு பிரசவ விடுதியையும் அங்கீகரிக்கவில்லை. அதனால் முழு பிரசவ சகாய பணத்தையும் தாய்மார்கள் பெற உரிமையுண்டு.


ஏதேனும் தோட்ட நிருவாகம் முழுத்தொகையை கொடுக்க மறுப்பின் உங்கள் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அணுகி இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவும்.

உங்களது மாவட்ட பிரதிநிதிக்கு இது பற்றிய தெளிவு இல்லையாயின் உங்களது தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

# தோட்டத் தொழிலாளர்களே கம்பனியால் வழங்கப்பட்ட பங்குகளை விற்காதீர்கள். பங்குகளை விற்காது நீங்களே வைத்துக் கொள்வதனால் ஏற்படும் நன்மைகள்

## பங்குகள் என்றால் என்ன?

கம்பனி தனது முலதனத்தை திரட்டிக் கொள்வதற்காக பொது மக்களுக்கு விற்பனை செய்யும் பங்குப்பத்திரங்களையே கம்பனியின் பங்குகள் என அழைப்பர். பொது கம்பனிகளினாலேயே பங்குப்பத்திரங்கள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இன்று தேயிலை தோட்டங்களை நிர்வகிக்கும் கம்பனிகள் பெரும்பாலும் பொது கம்பனிகளாகவே காணப்படுகின்றன.


PLANTATIONS LIMITED

ORDINARY SHARE CERTIFICATE

### உபகார பங்குகள் என்றால் என்ன?

கம்பனியின் பங்குப் பத்திரங்களில் ஒரு வகையான பங்கு பத்திரங்களே உபகாரப் பங்குகளாகும். இப்பங்குகளை பெறுமளவு இலாபம் வரும் போது கம்பனியில் வேலை செய்பவர்களுக்கு ஏற்கனவே பங்குகளை வைத்திருக்கும் பங்காளர்களுக்கும் கம்பனிகள் இலவசமாக வழங்குகின்ற பங்குகளாகும். இங்கு கம்பனியில் வேலை செய்பவர்கள் என்பது அந்த கம்பனியின் முகாமையின் கீழ் வேலை செய்யும் உயர் உத்தியோகத்தர் முதல் கீழ்மட்ட தொழிலாளர்களையும் உள்ளடக்கும்.

இவ் உபகாரப் பங்குகளை தொழிலாளர்களுக்கு வழங்குவதன் நோக்கம் யாதெனில் கடந்த காலங்களில் தொழிலாளர்களின் உழைப்பினால் பெறப்பட்ட இலாபங்களை தொழிலாளர்களும் அனுபவிக்க வேண்டும் என்பதுடன் எதிர்காலத்திலும் கம்பனிக்கு இலாபத்தை தேடித் தருவதற்கு மிகவும் அக்கறையாக உழைப்பார்கள் என்ற எதிர்பார்ப்புமாகும். எது எப்படி இருப்பினும் இவ் உபகாரப் பங்குகளை தம் கைகளில் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் அக்குறித்த கம்பனியின் பங்குதாரர்களாக காணப்படுகின்றார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

### பங்குகளின் முகப் பெறுமதி என்றால் என்ன?

பங்குகளின் முகப் பெறுமதி என்பது அந்த பங்கினுடைய முகப்பில் அந்தப் பங்கின் முகப்பெறுமதி என குறிப்பிடப்பட்டுள்ள தொகையாகும். இது பொதுவாக ரூ. 10 அல்லது ரூ. 100 என குறிப்பிடப்பட்டிருக்கும். இங்கு பங்குலாபமும் இந்த முகப்பெறுமதியை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படும்.

### பங்குகளின் சந்தை விலை என்றால் என்ன?

பங்குகளின் முகப் பெறுமதி எப்படி இருப்பினும் கம்பனி குறித்தளவு தொகையான பங்குகளை மாத்திரமே வழங்குவதால் சந்தையில் அப்பங்குகளை கொள்வனவு செய்வதற்கான போட்டி ஏற்பட்டு அதன் விளைவாககுறித்த முகப் பெறுமதியை விட கூடுதலான விலை கொடுத்து அப்பங்குகளை வாங்க கொள்வனவாளர்கள் தயாராக இருப்பார்கள். அவ்வாறு கொடுக்க தயாராக உள்ள விலையே சந்தை விலை எனப்படும்.

## பங்கு வட்டம் என்றால் என்ன?

பங்குவட்டம் எனப்படுவது பங்கின் முகப் பெறுமதியை விட பங்கின் சந்தைவிலை அதிகமாக காணப்படும் போது அம்முகப் பெறுமதியை விட அதிகரித்த தொகையே பங்கு வட்டம் எனப்படும். உதாரணமாக

முகப்பெறுமதி = 10/-
சந்தை விலை = 48/-
∴ பங்கு வட்டம் = 48/- – 10/-
= 38/- ஆகும்.

## பங்கு இலாபம் என்றால் என்ன?

பங்கு இலாபம் என்பது கம்பனி ஆண்டு முடிவில் தனது கணக்குகளை பார்த்து முடித்த பின்னர் அக்குறித்த ஆண்டில் பெறப்பட்ட இலாபத்தை பங்குப் பத்திரங்களை வைத்திருப்பவர்களுக்கு வழங்குவதைக் குறிக்கும். இது சில வேளைகளில் 6 மாத காலத்தில் இடைக்காலப் பங்கிலாபம் என்ற முறையிலும் பங்குகளை வைத்திருப்பவர்களுக்கு பங்கு இலாபம் வழங்கப்படும். இவ்வாறு ஒவ்வொரு வருடமும் ஆண்டு முடிவில் அல்லது 6 மாத காலத்திற்கு ஒரு முறை பங்குகளை தம் கைகளிலேயே வைத்திருப்பவர்களுக்கு பங்குலாபம் வழங்கப்படும்.

## பங்குகளை பிறருக்கு விற்பதனால் ஏற்படும் நன்மை தீமைகள் யாவை?

பங்குகளை தம் கைகளிலேயே வைத்திருப்பதனால் உயர்ந்து செல்லும் பங்கு வட்டத்தினால் ஏற்படும் பயனை பெறுவதுடன் ஒவ்வொரு வருடமும் கிடைக்கும் பங்குலாபத்தையும் அனுபவிக்கலாம். உங்கள் காலத்திற்கு பின்பு இப்பங்குகளை உங்களது பிள்ளைகளுக்கோ உறவினர்களுக்கோ நன்கொடையாக வழங்கலாம். கம்பனி நிச்சயமாக நட்டத்திலேயே இயங்குகிறது என்றால் அவற்றை விற்பது நல்லது.

பொதுவாக தேயிலை தோட்டங்களை நிர்வகிக்கும் கம்பனிகள் பெறுமளவு இலாபத்தையே பெற்று வருவதனால் உங்களிடம் உள்ள தோட்ட நிருவாக கம்பனியின் பங்குகளை விற்று ஏமாந்து விடாதீர்கள்.

---

## ஒரு பெண்

ஒரு பெண் சாதி, மதம், இனம், மரபு, கலாசாரம், கலை, புராணங்கள், சமூகம், அரசாங்கம், சட்டம், இயற்கை இவைகளில் ஏதேனும் ஒன்றிற்கோ அல்லது பலவற்றிற்கோ கட்டுப்பட்டாக வேண்டிய நிர்பந்தத்தில் இருக்கின்றாள். அல்லது அவற்றில் ஒன்றால் அல்லது பலவற்றால் அவள் சிறைப்படுத்தப்படுகிறாள். அந்தத் தளையிலிருந்து அவள் மீண்டு வெளிவரத் துடிக்கிறாள். இங்கே பெண்மை போராடிக் கொண்டே இருக்கிறது. முழுமுச்சாகப் போராடி, ஒரு தளையிலிருந்து மீண்டு வெளியே வந்தால், அடுத்ததளை வேறு ஒரு உருவத்தில் அவளுக்கு விலங்கிடக்காத்து நிற்கிறது. மீண்டும் போராட்டம்.

நன்றி:- "பெண் சுதந்திரம்"

**குடந்தையான்**

## சட்ட ரீதியான திருமணத்திற்கு திருமணம் செய்யும் பெண்ணின் சம்மதம் கட்டாயமானதா?

**ஆம்.**

பொதுத் திருமண கட்டளை சட்டத்தின் பிரகாரம் திருமணம் செய்யும் இரு தரப்பினர்களின் சம்மதமின்றி (மணமகன், மணமகள்) நடைபெறும் திருமணம் சட்ட ரீதியானதாக கருதப்பட முடியாது என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இதே சட்டத்தில் திருமணம் செய்யக்கூடிய வயது பற்றிக் குறிப்பிடுகையில் ஆணாயின் 16 வயதையும் பெண்ணாயின் 12 வயதையும் ஆகக் குறைந்த வயதாக காணப்படல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் ஆண் ஒருவர் 16 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட வயதில் திருமணம் செய்யும் போதும், பெண் ஒருவர் 12 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட வயதில் திருமணம் செய்யும் போதும் அவ் ஆணினதும் பெண்ணினதும் சம்மதத்துடனும் திருமணம் நடைபெறும் போதே அத்திருமணம் சட்டத்தினால் அங்கீகரிக்கப்படும். ஆனால் 18 வயதிற்கு மேற்பட்ட ஆணும் பெண்ணும் திருமணம் செய்யும் போது அவர்களது சம்மதம் மாத்திரம் போதுமானது. இங்கு பெற்றோர்களின் சம்மதம் தேவையில்லை. எனவே எச்சந்தர்ப்பத்திலும் திருமணப்பெண்ணின் சம்மதமின்றி நடைபெறும் திருமணங்கள் யாவும் சட்டத்தின் முன்னால் அங்கீகரிக்கப்பட முடியாத திருமணங்களாகும்.

ஆயினும் சில சந்தர்ப்பங்களில் திருமணம் மணமகனுடைய அல்லது மணமகளுடைய விருப்பமின்றி அவர்களின் பெற்றோர்களின் அல்லது பாதுகாவலர்களின் கட்டாயப்படுத்தலினால் நடைபெறலாம். இவ்வாறு நடைபெறும் திருமணத்தை திருமணம் செய்த ஆண் அல்லது பெண் குறித்த திருமணம் வலுகட்டாயத்தினால் அல்லது தகாத செல்வாக்கினால் நடந்துள்ளது என எடுத்துக் காட்டுவதன் மூலம் அத்திருமணத்தை இரத்து செய்து விடலாம். இங்கு முக்கியம் யாதெனில் வலுக்கட்டாயம் அல்லது தகாத செல்வாக்கு பயன்படுத்தியதால் தான் திருமணத்திற்கு சம்மதித்ததாக கூறுபவர் அதனை நிரூபிக்க வேண்டும். இவ்வாறு திருமணத்தை இரத்து செய்யும் ஏற்பாடுகள் பதிவுத் திருமணம் ஒன்றை செய்தும் கணவன் மனைவியாக வாழாதவர்களினாலேயே பெரும்பாலும் மேற்கொள்ளப்படுகின்றது.

### லட்சுமியின் பிரச்சினை

பெண் ஒருவர் நாட்டின் தலைவியாகினால் பெண்களின் பிரச்சினை தீர்ந்து விடுமா? பொதுவாக பெண் நாட்டின் தலைவியாகினால் பெண்களின் பிரச்சினை தீர்ந்து விடும் என்ற எண்ணம் பரவலாக இருந்து வருகிறது. உண்மையில் அவ்வாறு நடைபெறுவதில்லை.

இங்கு பிரச்சினை என்னவென்றால் நிலவும் முதலாளித்துவ கட்டமைப்பில் தலைமையேற்கும் பெண் தலைவிகள் பெரும்பாலும் பெண்களின் பிரச்சினைகளை துள்ளியமாக அறிந்திருப்பதில்லை. மாறாக அறிந்திருப்பினும் ஆணாதிக்கம் மேலோங்கியுள்ள முதலாளித்துவ கட்டமைப்பினுள் இவர்களால் எதனையும் பெரிதாக சாதிக்க முடியாது. எனவே பெண் தலைவி என்பதற்காக பெண்கள் பிரச்சினையைத் தீர்த்து விடுவார் என எதிர்பார்ப்பது எம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகவே அமையும்.

## வாசகர்களுக்கும், படைப்பாளிகளுக்கும் ........

இவ் உரிமையில் வரும்
உள்ளடக்கம் தொடர்பான
உங்கள் அபிப்பிராயத்தை
எமக்கு அறியத் தாருங்கள்

இவை போன்று மக்களுக்கு
தெரியப்படுத்த வேண்டிய
உங்கள் ஆக்கங்களை
எமக்கு அனுப்பி வைத்தால்
அது தகுதியானதாக இருப்பின்
இவ்விதழில் பிரசுரிப்போம்.

அதே போல் நீங்கள் அறிய
வேண்டிய விடயங்கள்
இருப்பின் அவற்றை அறிவித்தால்
அடுத்த இதழில் அதனை பிரசுரிக்க
முயற்சி எடுப்போம்.

---

*ஆசிரியர் : எஸ். கைலாசமூர்த்தி*

*வெளியீடு:*
**சமூக அபிவிருத்தி நிறுவகம்,**

*இல . 16 முல்கம்பொல பாதை.*
*கண்டி.*

**STAMP**

*To :*

................................................

................................................

................................................

Institute of Social Development, No. 16, Mulgampola Road, Kandy. Tele/Fax: 08-226149. Email: isdkandy@slt.lk

Printed by '*Graphic Land*' 472, Peradeniya Road, Kandy. Tel: 074 - 472466